1983 ஜனவரி 31]

கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் உள்ளூர் எழுத்தர்கள் பணியை முறைப்படுத்தும் திட்டம்.

*வினா எண். 70—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கூட்டுறவுசட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலம் முழுவதும் கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றும் உள்ளூர் எழுத்தர்கள் (Local Clerks) பணியை முறைப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) மற்றும் (ஆ): அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே, தமிழ்நாடு முழுவதும் இப்படி முறையாகக் கூட்டுறவுப் பயிற்சி பெற்றிருப்பவர்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு? கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றக் கூடியவர்கள் மாற்றம் பெற முடியாது. அவர்கள் குறைந்த சம்பளமே பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கத் தலைவரின் தயவில்தான் அவர்கள் பணியாற்ற முடியும். அதனால்தான் பெரும்பாலும் கூட்டுறவுச் சங்கங்களில் தவறுகள் நடைபெறுகின்றன. ஆகவே, கூட்டுறவுத் துறையில் பணியாளர்களை நிரந்தரமாக்கவும், கூட்டுறவுத் துறையில் பயிற்சி பெற்றவர்களைக்கொண்டு மேற்பார்வை செய்யவும், இனிமேல் பயிற்சி பெற்றவர்களையே நியமித்து, அவர்களை நிரந்தரமாக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, எம்பிளாய்மென்ட் எக்சேஞ்சின் மூலம் அல்லாமல் நேரடியாக அந்தந்த மாவட்டத்தில் நியமிக்கப் பட்ட பலர் ஏற்கனவே நிரந்தரமாக பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இன்னும் 1,234 பேர்கள் நிரந்தரப்பணியில் அமர்த்தப்படவில்லை. இதில் இரு பிரச்சினைகள் இருக்கின்றன. எம்பிளாய்மென்ட் எக்சேஞ்சு மூலம் அவர்கள் நியமிக்கப்படவில்லை என்பது ஒரு காரணம். கூட்டுறவுத் துறையில் குறைந்தபட்ச பயிற்சி கூட பெறவில்லை என்பது மற்றொரு காரணம். இது குறித்து அரசு விரைவில் பரிசிலனை செய்து, தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

திரு. வேடச்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே, முறையாக கூட்டுறவுத் துறையில் பயிற்சி பெற்றவர்களுக்குக்கூட குறைந்தஅளவு சம்பளம்தான் கொடுக்கப்படுகிறது. 250 ரூபாய் சம்பளத்தில் 10 ஆண்டுகளுக்குமேல் அவர்கள்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பணியாற்றிவிட்டார்கள். எம்பிளாய்மென்ட் எக்சேஞ்சில் அவர்கள் பெயர்களையும் கான்சல் செய்துவிட்டார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் மதுரை மாவட்ட மத்திய வங்கியில் 50, 60 பேர்கள் நியமிக்கப்பட்டு, இப்போது அவர்களை நிரந்தரமாக்க முயற்சி செய்தபோது, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் அவர்களுடைய பதிவு ரத்து செய்யப்பட்டிருப்பதால், அவர்கள் எல்லாம் நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ள முடியவில்லை. சுமார் 200—க்கு மேற்பட்டவர்கள் அப்படி இருக்கிறார்கள் மதுரை மாவட்டத்தில். இந்தப் பிரச்சனையைக் கருதிப் பார்த்து அரசு விரைவான நடவடிக்கை எடுத்து, இப்போது பணியல் இருப்பவர்களை நிரந்தரமாக்க தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, ஏறத்தாழ 10 ஆண்டு காலமாக பணியில் இருப்பவர்களையும், கூட்டுறவுத் துறையில் பயிற்சி பெற்று பணியில் இருப்பவர்களையும், நிரந்தரமாக்குவது குறித்து அரசு ஆராய்ந்து விரைவாக நடவடிக்கை எடுக்கும் என்று ஏற்கெனவே சொன்னேன்.

திரு. பாபு ஜனார்த்தனன்: தலைவரவர்களே, கூட்டுறவு பயிற்சி பெற்றவர்கள் அந்தந்த உள்ளூரிலே நிறைய பேர் இருக்கிறார்கள். இலட்சக் கணக்கான ரூபாய் இலாபம் வரக்கூடிய கூட்டுறவு வங்கிகளிலே கூட ஆட்களை நியமிக்க ஏற்பாடு செய்தால் அவர்கள் உள்ளூரிலேயிருந்து வரவில்லை என்று எம்லாய்மென்ட் ஆபீசுக்கு திருப்பி அனுப்பிவிடுகிறார்கள். ஆகவே, குறைந்தபட்சம் உள்ளூர் ஆட்களையே வேலைவாய்ப்பு அலுவலகங்கள் அனுப்ப ஏற்பாடு செய்யப்படுமா? அது மட்டுமல்லாமல் பெருமளவுக்கு இலாபம் வருகின்ற கூட்டுறவு வங்கி போன்ற நிறுவனங்களில் தேவையான அளவுக்கு பணியாளர்களை நியமிக்க அரசு ஒரு கொள்கையை வகுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, ஒவ்வொரு நிர்வாகத்தினுடைய 'டரன் ஓவருக்கும், ஏற்றப்படி அங்கே பணியாற்றக் கூடிய பணியாளர்கள் இருக்க வேண்டுமென்ற நடைமுறை இருக்கிறது. சில இடங்களில் அவ்வாறு உரிய முறையில் இல்லை என்பது தெரிகிறது. டர்ன் ஓவர் அதிகமாக இருந்தாலும் பணியாளர்கள் குறைவாக இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டும்போது அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கலாம்.

கூட்டுறவு நிறுவனமாக இருந்தாலும் அல்லது ஏதாவது ஒரு தொழில் நிறுவனமாக இருந்தாலும் அந்தந்த ஊரில் இருக்கிறவர்களுக்கு வேலை கொடுப்பதில் முன்னுரிமை கொடுப்பது நல்ல நடைமுறை. ஆனால் Discrimination cannot be effected because it will violate Art. 14 of the Constitution., என்ற காரணத்தால்

அந்த விதியை நாம் மாற்ற முடியாது. இருந்தாலும் நடைமுறையில் உள்ளூரில் இருப்பவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்ற நடைமுறையை ஏற்படுத்த என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அது குறித்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. எஸ். சிவராமன்: தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கிகளில் ஊழியர்களை நியமனம் செய்வதற்கு முன்பெல்லாம் மத்திய வங்கியின் மூலமாகத்தான் செய்யப்பட்டது. அதாவது அவர்களுடைய ஒப்புதல் பெற்றுதான் நியமனங்கள் நடைபெற்றன. ஆனால் இன்றையதினம் கூட்டுறவு வங்கிகளில் அந்தந்த இடங்களில் அவரவர்களாகவே நியமனம் செய்து கொள்ளலாம் என்று உள்ளது. இதனால் பல ஊழல்கள் நடைபெற வாய்ப்பிருக்கிறது. அதிலுள்ள தலைவர்கள் சொல்வது போலத்தான் நியமனங்கள் செய்யவேண்டியிருக்கிறது. அதை மாற்றி மத்திய வங்கிகள் மூலமாக நியமனம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு செய்ய அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள நடைமுறையில் இருக்கிற சட்டம் 'அதை ஒட்டிய விதிகளின் அடிப்படையில்' ஒரு கூட்டுறவுச் சங்கம் "Each society is an autonomous body" அதனால் அவர்களாகவே பணியாட்களை நியமிக்கலாம் என்று முழு உரிமையும் உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போன்ற முறை சில நேரங்களில் சில மாவட்டங்களில் இருந்தது. மத்திய வங்கியிலிருந்து அவர்கள் கடன் வாங்கிய அடிப்படையில், இன்னும் மற்றும் சில அடிப்படைகளில், அப்படி சில இடங்களில் நடைபெற்றது உண்மைதான். ஆனால் வர இருக்கிற சட்டத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய ஆலோசனை நடைமுறையில் வர இருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவு சங்கங்களிலே பணியாற்றும் ஊழியர்கள், எழுத்தர்கள் போன்றவர்கள், மாண்புமிகு உறுப்பினர் பாலசுப்பிரமணியன் அவர்கள் சொன்னதைப் போல மிக குறைந்த சம்பளம் ரூ. 40, 50, 100 என்று பெற்றுக் கொண்டு பணியாற்றி வருகிறார்கள். அவர்கள் ஏற்கனவே பணியாற்றியிருப்பதால், எம்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சிலும் அவர்களுடைய பெயர் நீக்கப்படுகிறது. ஆகவே, அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, ஏற்கனவே பணிபுரிந்திருக்கிறார்கள் என்கிற அடிப்படையில் அவர்களுக்கு பிரோமோஷன் முறையில் பதவிகள் வழங்க, அரசு பரிசீலனை செய்வது என்பதற்குப் பதிலாக உடனடியாக நியமனம் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் தற்காலிக பணியாளர்களாக இருப்பவர்களுக்கு உடனடியாக நேரிடையாக சூப்பர்வைசர்களாக புரோமோஷன் கொடுப்பது என்பது நடக்க முடியாத காரியம். ஏனென்னில் முதலில் தற்காலிக பணியில் இருப்பவர்களுக்கு நிரந்தரமான பணிகள் கொடுத்தாக வேண்டும். பிறகுதான் அக்கார்டிங் டு தேர் சீனியாரிட்டி, புரமோஷன் கொடுக்க பரிசீலிக்க முடியும் அதுதான் இருக்கிற முறை.

தேயிலை மீதான விற்பனை வரி

*வினா எண் 63—திரு. கு. ரமணி மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தேயிலைத் தோட்ட முதலாளிகள் கேட்டதற்கிணங்க தேயிலை மீது விற்பனை வரி குறைக்கப் பட்டுள்ளதா?

(ஆ) ஆமெனில் அது பற்றிய விவரங்கள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) ஆம்.

(ஆ) கோவை மற்றும் கூனூரில் உள்ள தேயிலை ஏல விற்பனை மையங்களில் விற்கப்படும் தேயிலைக்கு 5 சதவீதமாக இருந்த வரியினை 2 1/2 சதவீதமாக 9-11-81 முதல் ஒரு ஆண்டுக்கு குறைக்கப்பட்டது. பிறகும் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, இந்த குறைக்கப்பட்ட வரி விதிப்பை 9-11-82 முதல், 8-11-1983 முடிய நீடித்துள்ளது.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேயிலைத் தோட்ட முதலாளிகள் நிறைய இலாபம் சம்பாதிக்கக் கூடிய தொழிலை நடத்தும் பணக்காரர்கள். ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் அவர்களுடைய தொழிலில் சிறிது சங்கடங்கள் ஏற்பட்டாலும் தொடர்ந்து இலாபம் அடையக்கூடிய சூழ்நிலை அந்தத் தொழிலில் உண்டு. அவர்களுக்கு ஏன் அரசாங்கம் பரிந்துப் போய் இந்த வரியைக் குறைக்க வேண்டும்? இதற்கு என்ன காரணம் என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தேயிலையை ஏலம் போடுகிற முறை இருக்கிறது. அதை கேரளாவிலே போடுகிறார்கள். கேரளாவிலே ஏலம் போடுவதால் இங்கேயுள்ளவர்கள் அங்கே போய் ஏலம் எடுக்கிறார்கள். இதனால் நம்முடைய வருமானம் குறைத்துவிடுகிறது என்கிற காரணத்தால் கோவையிலே புதியதாக ஏலம் போடுகிற முறையை ஏற்படுத்தியிருக்கிறோம்.